Registered as a Newspaper in Ceylon

விலை சதம 10

# ஈழநாடு

EELA N.DU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி மார்கழி 14 அம் நாள் ஷஃபான் பிறை 23. (28-12 64 திங்கட்கிழமை இதழ் 319




# வட, கிழக்கு பகுதிக்கு ரூபாய் 3,85,000

## நிவாரணவேலைகள் உடனடியாக ஆரம்பமாகும் என அறிவிப்பு

### திருமலைக்கு 1,50,000 ரூபாயும் மன்னருக்கு 1,10,000 ரூபாயும் செலவிடப்படும்

கொழும்பு, ஞாயிறு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல நிவாரண வேலைகளை மேற்கொள்ள அரசாங்கம் துரித நடவடிக்கைகள் எடுத்துள்ளது. அண்மையில் ஏற்பட்ட சூறவளியினாலும் பெருமழையினாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செலவிட சமூகசேவைப்பகுதி இப்பொழுது மூன்று லட்சத்து எண்பத்து ஐயாயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

சமூகச்சேவைப் பகுதியினால் ஒதுக்கப்பட்ட இந்தப் பணத்தில், ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் திருக்கோணமலைப் பகுதிக்கும், ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபாய் மன்னருக்கும் ஐம்பதினாயிரம் ரூபாய் யாழ்ப்பாணத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்துக்கு நாற்பதினாயிரம் ரூபாவும் அனுராதபுரம பகுதிக்கு முப்பத்தையாயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளவிருக்கும் சகல நிவாரண வேலைகளுக்கும் சமூகசேவை அதிபர் இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## சூறவளி கஷ்ட நிவாரண நிதி

### 'ஈழநாடு' ஆரம்பித்தது

இயற்கை அன்னைக்குத் தமிழர் மீது என்ன கோபமோ தெரியவில்லை! வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே சூறவளிக் காற்றினால் ஒரு சிலமணி நேரத்துக்குள்ளாகச் சொல்லமுடியாத பெரும் நஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டன இதைப்பற்றி வரவரக் கிடைக்கும் விவரங்களைப் பார்ப்பின், இதுவரை என்றுமே இல்லாதபடி தமிழர் வசிக்கும் பகுதியிலே பயங்கர கஷ்டநஷ்டங்கள் விளைந்துள்ளதாகத் தெரிகிறது.

அன்றாடம் ஆழ்கடலிலே வெகுதூரம் சென்று மீன்பிடித்து வரும் அன்பர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் புயலில் சிக்கி அவர்களது சடலங்கள இந்தியக் கரையில் ஒதுக்கப்பட்டுள்ளனவாம்! இதை அறிய அவர்களது குடும்பத்தாரின் மனம் என்ன பாடுபடும்! அவர்கள் ஜீவனத்துக்கு இனி என்ன செய்வர்?

இன்னும் இந்தப் புயலாலும் வெள்ளத்தாலும் எத்தனை எளிய குடும்பங்கள் பரதவிக்கின்றனவோ! இம்முறை மழை பெய்யாததால், எல்லாக் கமக்காரருக்கும் பெரும் நஷ்டம. இதுபற்றி பெரும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில், சூறவளியும் வெள்ளமும் வந்து, மரங்களை முறித்து, குடியிருப்பு வீடுகளை இடித்துத்தள்ளி, பல பல குடும்பங்களையும் நடுத் தெருவிலே தவிக்கவிட்டுவிட்டது பெரும் கன்றுவி.

இந்நிலையில் இதற்கெல்லாம் தப்பியுள்ள நாம் என்ன செய்யவேண்டுமென்பதே முக்கிய கேள்வி. புயலாலும் வெள்ளத்தாலும் பரிதவிக்கும் எளிய மக்களின் கண்ணீரைத் துடைக்க நம்மால் கூடுமானதையெல்லாம் செய்யவேண்டும். அவர்களிடம் நாம் எவ்வளவு கருணை காட்டுகின்றோமோ. அவ்வளவுக்கு தெய்வம் நமக்குக் கருணை காட்டும்.

தமிழ் மக்களின் சேவையையே தனது முக்கிய பணியாகக் கொண்டுள்ள 'ஈழநாடு' கஷ்டநிவாரண நிதி திரட்ட முன்வர வேண்டுமென்று சில தமிழ்த்தாய்மார்கள் முன்வந்து ஊக்கி ரூபா 250 க்குக் காசோலையும் அன்பாக அனுப்பிவைத்தனர். புரக்டர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் ரூபா 10 அளித்து நிதிக்கு ஆசிகூறியுள்ளார். மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையாகும். நம் மக்களுக்கு உதவுவது நமக்கு நாமே செய்துகொள்ளும் உதவியாகும்.

பணத்தை

"புயல் கஷ்டநிவாரண நிதி"

"ஈழநாடு" த. பெ. 49, யாழ்ப்பாணம்,

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். வசூல் விவரங்களை அவ்வப்போது பத்திரிகையில் வெளியிடுவோம்.

| | | | |
|---|---|---|---|
| வசந்தா டெக்ஸ்டைல்ஸ் யாழ்ப்பாணம் | ... | ரூ. | 250-00 |
| திரு. எஸ். சிவசுப்பிரமணியம், | ... | ரூ | 10-00 |
| "ஈழநாடு" முதல் தவணை ... | ... | ரூ | 250-00 |
| பாரிஸ்டர் எம். சிவானந்தன், கொடிகாமம் | ... | ரூ. | 50-00 |
| அட்வகேட் ரீ கணேசலிங்கம் யாழ்ப்பாணம்... | | ரூ. | 50-00 |
| புரக்டர் ரீ. சங்கரப்பிள்ளை, யாழ்ப்பாணம் ... | | ரூ | 10-00 |

## பலாலி—திருச்சி விமான சேவை

காங்கேசன்துறை, ஞாயிறு

யாழ்ப்பாணத்திற்கும் திருச்சிக்குமிடையில் நிறுத்தப்பட்டிருந்த விமானசேவை இம்மாதம் 29-ந் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகும். இந்தச்சேவை வாரத்தில் செவ்வாய் வியாழன் ஆகிய இருநாட்களில்மட்டுமே நடைபெறும்.

## சீரடைந்தது

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்றிரவு 9-30 மணியளவில் யாழ்ப்பாணம் — கொழும்பு, யாழ்ப்பாணம்— அநுராதபுரத் தந்தித் தொடர்புகள சீரடைந்தன அவை நேற்றிரவு 10-00 மணி தொடக்கம் வழமை போல் இயங்கிவருகின்றன. மன்னர், திருகோணமலை தொலைபேசித் தொடர்புகள் இன்னும் சீராகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 24 ஆங்கில சஞ்சிகைகளை நிறுத்த பொதுநூலகம் முடிவு

### புதிய சஞ்சிகைகள் பல தருவிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு வரும் 100 சஞ்சிகைகளில் 24 ஆங்கில சஞ்சிகைகளை நிறுத்தி விடுவதென நூலக புத்தகத் தெரிவு கமிட்டி முடிவு செய்திருக்கிறது. குறிப்பிட்ட சஞ்சிகைகளை வாசிப்பவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலேயே இம்முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## கடற்படைத் தளபதி யாழ்ப்பாணம் வந்தார்

யாழ்ப்பாணம், திங்கள்

அண்மையில் ஏற்பட்ட கோரச் சூறவளியினால் உயிரிழந்த மீனவர்களின், பாதிக்கப்பட்ட குடும்பங்களை எவ்விதம் புனருத்தாரணம் செய்வது என்பது பற்றியும், அரசாங்கத்தின் மூலம் அவர்களுக்கு என்னென்ன வசதிகளைச் செய்யலாம் என்பது பற்றியும் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த கடற்படைத் தளபதியும், இலங்கை மீன்துறை அபிவிருத்தி கூட்டுஸ்தாபன அங்கத்தவருமான கமாண்டர் ராஜன் கதிர்காமரும், பருத்தித்துறை முன்னாள் எம். பி. திரு. க. துரைரத்தினமும் சுமார் ஒரு மணிநேரம் ஆலோசனை நடத்தினர் காரைநகர் கடற்படை முகாமில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

புனருத்தாரண விடயம் பற்றிய குறுகிய கால நடவடிக்கையைப்பற்றியும் நீண்டகாலத் திட்டம்பற்றியும் பேசும்போது உடனடியாகவே மீன்பிடி வள்ளங்களுக்காக அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய கடன்களைப் பாதிக்கப்பட்டவர்களிடம் அறவிடாது அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், வள்ளங்

(6-ம் பக்கம் பார்க்க)

## சீன கடற்கரையில் அமெரிக்க நாசகாரி

### ரோந்து நடவடிக்கையில் ஈடுபாடு

வாஷிங்டன், டிச. 27

போலாரிஸ்ராக்கெட்டுகளைக் கொண்ட அமெரிக்க நாசகாரி கப்பலொன்று சீன கடற்கரையில் ரோந்து சுற்றிவருகிறது. இந்த நாசகாரி கப்பலில் போலாரிஸ் ராக்கெட்டுகளுடன் மிகவும் பயங்கர ஆயுதங்களும் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீன தேசத்தின் கிழக்குப் பகுதி கடற்கரைப்பிராந்தியத்தில் இந்தநாசகாரி கப்பல் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக இங்கிருந்து வெளியான செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்காவின் இந்தவிபரீத நடவடிக்கைகள் குறித்து சீனா கடுமையான ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

## மணிவாக்கு

ஒரு ஸ்தாபனம் என் வளர்ச்சிக்கும் தேசவளர்ச்சிக்கும் உதவும் வகையில்தான் அதனிடம் நான் விசுவாசமாயிருப்பேன். அவ்வாறின்றி வளர்ச்சிக்குத் தடையாயிருப்பதாக எனக்குத் தெரிந்தால், உடனே அதனிடம்கொண்டுள்ள விசுவாசத்தை நிறுத்திவிடுவதை என் கடமையாகக் கொண்டிருக்கின்றேன்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 14 உ (28-12-64)

## ஆபத்துக்கு உதவாத சட்டமும் கட்டுப்பாடும்

ஆபத்துக்கு உதவாத சட்டமும் நிர்வாகக் கட்டுப்பாடுகளும் அவசியம்தானா என்பதை அரசாங்கமும் பொறுப்புள்ள தலைவர்களும் பொது மக்களும் சிந்திக்கவேண்டியது அவசியம் என்பதை சூறாவளிச் சம்பவங்கள் எடுத்துக் காட்டியுள்ளது.

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் தன்னாலான உதவிகளை அளிக்க முயற்சி செய்து வருவதும் அந்தந்தப் பகுதியிலுள்ள அரசாங்க அதிகாரிகள் இயன்ற உதவிகளைச் செய்து வருவதும் இவர்களுக்கு பொதுமக்களின் பாராட்டும் கிடைக்குமென்பதும் உண்மைதான். என்றாலும் உடனடியாக துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் பல உயிர்களைக் காப்பாற்றியிருக்கலாமென்பது பாதிக்கப்பட்ட மக்கள் பலர் தெரிவிக்கும் குறைபாடாகும். கஷ்டப்படுபவன் தனக்கு சரியான உதவி கிடைக்கவில்லையென்று குறைப்பட்டுக் கொள்வது மனித இயல்பு. என்றாலும் இலங்கையில் இதுபோன்ற கோர சம்பவம் இதற்குமுன் சமீபகாலத்தில் நிகழ்ந்ததில்லையாததால் இச்சந்தர்ப்பத்தில் எவ்விதம் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்ற அனுபவம் இலங்கைக்கு இல்லையென்பது உண்மைதான். செவ்வாய்க்கிழமை இரவுவீசிய சூறாவளியால்கடல் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் என்ன ஆனார்களோ என்று கலங்கிய மயிலிட்டியைச் சேர்ந்த சிலர் புதன் கிழமை முற்பகல் காரைநகர் கடற்படையினரிடம் சென்று உதவி கோரியபொழுது அரசாங்க அதிபரிடமிருந்து உத்தரவு கிடைத்தாலே தாம் உதவ புரிய முடியுமெனத் தெரிவித்தனராம். இது உண்மையாயின் அரசாங்க சட்டதிட்டங்களும் நிர்வாகக் கட்டுப்பாடும் ஆபத்து நேரத்திலும் வார்த்தைக்கு வார்த்தை சொல்லுக்குச் சொல் கடைப்பிடிக்கப்பட வேண்டுமா என்ற கேள்வியெழத்தான் செய்யும். நூற்றுக்கணக்கில் கடல் தொழிலுக்குச் சென்ற மீனவர்களைப் பற்றிய தகவலை அறிந்து கொள்ளவும் அவர்களைத் தேடுவதற்கும் கொழும்பிலிருந்த யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு இங்கிருந்து ரேடியோ டெலிபோன்மூலம் தகவல் தெரிவித்து அவர்மூலம் கடற்படையினருக்கு உதவிக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டியிருந்தது.

அரசாங்க அதிபர் அங்கில்லாத சமயத்தில் வேறொரு அதிகாரியாவது கடற்படையினருக்கு உத்தரவு பிறப்பிக்கக் கூடியதாக இருந்திருக்கவேண்டும். இல்லையேல்; ஆபத்தின் தன்மையையும் உதவிசெய்ய வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து கடற்படையினராகுதல் உடனடியாக உதவி செய்யக்கூடியதாக இருந்திருக்க வேண்டும்.

உடனடியாக கடற்படையினரும் விமானப்படையினரும் உதவிக்கு அழைக்கப்பட்டு மீனவர்களைக் காப்பாற்றச் சென்றிருந்தால் நூற்றுக்கு மேற்பட்ட கடல் தொழிலாளர் தனுஷ்கோடி மண்ணிலேயே அடக்கம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டிருக்காது. தென்னிந்தியாவிலும் சூறாவளி சேதம் விளைத்திருப்பதுடன் உயிர்ச்சேதமும் ஏற்பட்டிருப்பது உண்மைதான். ஆனாலும் அங்கு உதவி வேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டதால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளதென்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். விமான வசதி இலங்கையிடம் இல்லையாயினும் 1957-ம் ஆண்டில் வெள்ளம் ஏற்பட்டதும் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா உதவி கோரியபோது இந்தியாவிலும் அப்பொழுது வெள்ளம் ஏற்பட்டிருந்தும், இந்திய விமானப்படை விமானங்கள் உதவிக்கு விரைந்து வரவில்லையா?

காரைநகர் கடற்படைத் தளபதியும் மற்றும் சிப்பந்திகளும் நல்ல சேவை செய்து வருகின்றனர் என்பது உண்மைதான். ஆனால் சட்டமும் நிர்வாகக் கட்டுப்பாடும் குறுக்கிடாதிருந்தால் பல உயிர்களைக் காப்பாற்றிய புண்ணியம் அவர்களைச்சேர்ந்திருக்கும்.

# அழிந்த போர்க்களம் போல் காட்சி தரும் திருமலை நகரம்

## நேரில் கண்டவர் தரும் விபரங்கள்

[திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கு நேரில் சென்ற திரு. க. வை. ஆ. சர்மா, புயல் கொடுமையினால் அங்கு ஏற்பட்டுள்ள சேதங்களை இங்கு விபரமாக வெளியிடுகிறார்.]

கடந்த செவ்வாய்க்கிழமை எமது ஈழத்திருநாட்டின் வட, கீழ் மாநிலங்களில் எவரும் எதிர்பாராதபடி தோன்றிய சுழற்சிச் சூறைக்காற்றுச்செய்த அனர்த்தங்கள் எண்ணில் அடங்காதன. அவற்றால், முற்றிலும் பாழாகியுள்ளது திருக்கோணமலை நகரமாகும். அழிந்த போர்க்களம் போலக்காட்சிதரும் திருமலை நகரத்தில் மக்கள் இன்னும் உயிர் வாழ்வது இறைவன் திருக்கருணையை நினைக்கச்செய்கிறது.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பிலுள்ள எமது நண்பர் ஒருவரது வேண்டுகோளும், எமது ஓய்வு நாட்பிரயாண விருப்பமும் தூண்டினமையால் ஏழுபேர்கொண்ட கோஷ்டியாக, சென்ற திங்கட்கிழமை மாலை புகையிரத மூலம் நாங்கள் பிரயாணம்செய்தோம். அடுத்த நாள் செவ்வாய் முற்பகல்மட்டக்களப்பை அடைந்தோம். நீண்ட நாட்களாக மழையைக் காணாதிருந்த எமக்கு, நாம் அங்கு புகுந்தவுடன் மழை பெய்யத்தொடங்கியமை முதலில் மகிழ்ச்சிகரமாக இருந்தது. அப்பொழுது தொடங்கிய மழை அன்று முழுவதும் விடாது பெய்து கொண்டிருக்கவே அம்மகிழ்ச்சி நீடித்திருக்கவில்லை.

மாலை நான்கு மணியளவில், விடாமழையோடு சூறைக்காற்றும் வீசத்தொடங்கியது. மரங்கள் சுழன்று ஆட ஆரம்பிக்கவே, வெளியே தலை நீட்ட அஞ்சி வீட்டினுள் அடைபட்டிருந்தோம். மரக்கொம்பர்கள் முறிந்து வீட்டுக்கூரையில்விழத் தொடங்கின. மட்டக்களப்பில் அதிகசேதமிருக்கவில்லை. அடுத்தநாள், புதன் அதிகாலைகாற்று ஓய்ந்தது. மழையும் நின்றது. சூரிய தரிசனமுங்கிடைத்தது. எமது நண்பரது நன்முயற்சியால் நாம் தங்கியிருந்த கோட்டைமுனை வீரகத்திவிநாயகர் ஆலயத்தில் அப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை வழிபாடுகளும்,மகாலட்சுமி ஹோமமும் சிறப்பாக நிறைவேறின.

மற்றைநாள் வியாழக்கிழமை மட்டுநகரைச் சுற்றிப் பார்த்தோம். மிகச் சிலவேதவிர விசேஷமாக எடுத்துச்சொல்லக்கூடிய அளவுக்குச் சேதமொன்றும் எமது கண்ணிற்படவில்லை. யாவும் வழமைபோல் நிகழவே, கோணேசவரப்பெருமானை தரிசிக்கவிரும்பி கண்பகல் "பஸ்" வண்டிமார்க்கமாகத் திருமலை நோக்கிப் பிரயாணமானோம்.

மாலை ஐந்து மணியளவில் எமது "பஸ்" வண்டி பொலநறுவையில் சிறிது தரித்து ஆறியது. அப்போது, அங்கு நின்ற யாழ்ப்பாண அன்பர் ஒருவர் எமது பிரயாணம் பற்றி விசாரித்தார். எமது நோக்கத்தைக்கூறவே, அவர் திருக்கோணமலைப்பகுதி மிகச் சேதமடைந்திருப்பதாகவும், அங்கு செல்வது புத்தியாகாதென்றும் கூறி எம்மைத் தடுத்தார். இறைவன் திருவருள் துணையாக எமக்கு மனத்தைரியமிருப்பதனால் எமது பிரயாணம் முட்டின்றி நிறைவேறும் என்றும், எம்மைத்தடுக்கவேண்டாம் என்றும் சொல்லி அவருக்கு நன்றி கூறிவிட்டுப் பிரயாணத்தைத் தொடர்ந்தோம்.

### திருமலையில்

மைபறணைச் சந்தி கழியும் பொழுது இருண்டது. சில மைல்தூரம் கடந்தபின், வழியெல்லாம் பெருமரங்கள் வேரோடு புரண்டு கிடக்கும் காட்சிகள் புலப்படத்தொடங்கின. பொலனறுவை நண்பரிடத்தே தைரியங்கூறி வந்தோமாயினும், வழியில் வீழ்ந்துகிடக்கும்மரங்களுக்குமேலா எமது "பஸ்" வண்டி வளைந்தும், நெளிந்தும், சரிந்தும், "சட, சட" என்ற ஓசையோடு பக்கங்களில் அடிபட்டும் ஓடிக்கொண்டிருக்க எமது மனத்தில் அச்சம் குடிகொண்டது.

வழிக்கு உறுதுணையான வல்லன் ஐந்தெழுத்தையும் எனது நாவிடாது உச்சரிக்கத் தொடங்கியது. இரவு ஒன்பதரை மணியளவில் ஒருவாறு திருக்கோணமலை நகருள் புகுந்தோம். இரவிலே ஜோதிமயமாகக் காட்சிதரும் திருமலை நகரம் இருளில் மூழ்கி சூனியமாக இருந்தது போர்க்களக் காட்சிகளே போல் பலவண்டி வெளிச்சத்தில் புலப்பட்டன. எத்தனையோ கட்டடங்கள் தரைமட்டமாகவிருந்தன. ஒருவாறு வழி நடவிக் காளிகோவில் வீதியிலுள்ள எமது நண்பர் ஒருவரது இல்லத்தை அடைந்தோம். அவரது வீட்டில் பல சிதைவுகள் நேர்ந்திருந்தன. அந்நிலையிலும் அவர் எங்களைக் கண்டவுடன் மனப்பூர்வமாக வரவேற்று பேசி உபசரித்தமை மறக்க முடியாது.

வழியெல்லாம் மரங்கள் வேரோடு புரண்டும் திருகி முறுக்கப்பட்டும் வீழ்ந்து கிடந்தன. எத்தனையோ வீட்டுக் கூரைகள் காற்றினால் அள்ளிவீசப்பட்டுக் குட்டிச் சுவர்களாய் இருந்தன.

மீண்டும்கோணேசவரப்பெருமான் எழுந்தருளியுள்ள மலைக் கோயிலை அடைந்தோம். மலைக் கோட்டையிலுள்ள பல மரங்கள் முறிந்தும் வேரோடு சாய்ந்தும் சிதைந்துகிடந்தன, அங்கிருந்த மடம் ஒன்று அடியோடு அழிந்திருந்தது. ஆனால் மலைஉச்சியில்கோணேசப்பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயத்தில் மாத்திரம் எவ்வித சிதைவும் நேராதிருந்தமை பெருமகிழ்ச்சியையும் வியப்பையும் தந்தது. மீண்டும் நகரைச் சுற்றிப் பார்த்தோம். திருக்கோணமலை நகரத்தில் அநேகமாக எல்லா வீடுகளிலும் சேதமேற்பட்டிருந்தது. நாம் காணும் இடங்களிலெல்லாம் கூரைகளில்லாத வெறும் கட்டிடங்கள் மட்டுமே காட்சிகொடுத்தன. இவற்றைப் பார்ப்பதற்கு நெஞ்சம் மிகவும் சஞ்சலப்பட்டது.

ஆங்காங்கு மக்கள் படும் இன்னல்கள் வாயினால் சொல்லுந்தரமல்ல. எத்தனைபேர் உயிரிழந்தனர், எத்தனை பொருட்கள் சேதமாயின என்று இன்னும் சரிவரக் கணக்கிடப்படவில்லை. இந்த அவலமான நிலையில் மக்கள் தம்முயிருக்கு ஒதுக்கிடந்தேடி ஓடிக்கொண்டிருக்கும்போது ஒரு சில சுயநலவிஷமிகள் அகப்பட்ட பிறரது உடைகளைத் திருடினார்கள் என அறியும்போது அவர்களது அறியாமையை நினைந்து வருந்துவதைத் தவிர நாம் செய்யத்தக்கது பிறிதொன்றுமில்லை.

## யோகி ராமையா யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம், திங்கள்

யோகி ராமையா இம்மாதம் 31-ம் திகதி யாழ்ப்பாணம் வந்துசேரவிருக்கிறார். அவர் அடுத்தமாதம் 4-ம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது தங்கியிருக்கும் காலத்தில் யோகாசன வகுப்புகள் நடத்துவார். சொற்பொழிவுகளும் நிகழ்த்தவிருக்கிறார் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் அவர் இவற்றை நடத்தவிருக்கிறார்.

## 18-வது தடவையும் தோல்வி

ரோம், டிச. 27

இத்தாலிய ஜனாதிபதியொருவரை தேர்ந்தெடுக்க இன்று இத்தாலிய பார்லிமெண்டில் 18 வது தடவையாக வாக்கெடுப்பு நடைபெற்றது. ஆனால் எவரும் குறிக்கப்பட்ட வாக்குகள் பெறாததால் இன்றும் ஜனாதிபதி தெரிவு தோல்வியில் முடிந்தது. இத்தாலிய புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக பார்லிமெண்ட் நாளை மீண்டும் கூடி 19-வது தடவையாக வாக்கெடுப்பு நடத்தும்.

## பாம்பன் பாலத்துக்கு நேர்ந்த கதி

கடந்த புதன்கிழமை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக சரித்திரப் பிரசித்தி பெற்ற பாம்பன் பாலம் கடல் அலைகளின் கொந்தளிப்புகளினால் அடித்துச்செல்லப்பட்டிருக்கிறது. இது நினைத்தும்பார்க்கமுடியாத ஒரு விஷயமாகும்.

இடையறாது கடலின் அலைக்களிப்புக்கு உள்ளாகிவரும் இராமேஸ்வரம் தீவையும் மண்டபத்தையும் இணைக்கும் சரித்திரப் பிரசித்திபெற்ற பாம்பன் பாலம் கடல் அலைகளினால் அடித்துச்செல்லப்பட்டிருப்பது மிகவும் வேதனையும் அச்சமும் தரக்கூடிய சம்பவமாகும் இதனைப்போன்றதொரு பாலத்தை இனிமேல் புதிதாக அமைப்பதாகவிருந்தால் பல லட்சம் ருபாய்கள் செலவழிக்கவேண்டி நேரிடும். இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே இப்பாலம் மூலம்தான் போக்குவரத்து நடைபெற்றுவந்தது. இப் பாலம் இல்லாவிடில் கடல் மார்க்கமாக படகுகள்மூலமாகவே இந்தியாவை அடையவேண்டும்.

இந்தப் பாம்பன் பாலம் ஐரிஷ் தேசத்து என்ஜினியரான ஓஹன்செனி என்பவரால் நிறுவப்பட்டு 1914-ம் ஆண்டுபெப்ரவரி மாதம் போக்குவரத்துக்கு திறந்துவைக்கப்பட்டது. இந்தப் பாலத்தின் நீளம் 6,700 அடியாகும். 41 அடி கேடர்களைக்கொண்டு இப் பாலம் அமைக்கப்பட்டது. இதனைக் கட்டிமுடிப்பதற்கு 2,600 தொன் எஃகு உபயோகப்படுத்தப்பட்டது.

பாம்பன் பாலத்திற்கு நேர்ந்த கதி தவிர்க்கமுடியாத தொன்றாகும், கடற்கரைகளைப் பந்தோபஸ்து செய்து கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் அவ்வப்பொழுது மிகவும் தீவிரமாக மேற்கொண்டு வந்தாலும், இயற்கை அன்னையின் சீற்றத்திற்கு இது எம்மாத்திரம்! ஒரு சில வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட அரியலூர் ரயில் விபத்தை இன்னும் மறக்கமுடியாது. பாலத்தை நன்றாகக் கவனித்துவந்தபொழுதிலும் அந்த விபத்து நடைபெற்றுவிட்டது. ஆனால் பாம்பன் பாலத்தைப் பொறுத்தமட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக இருந்துவந்திருக்கின்றன. இருந்தபொழுதிலும் இயற்கையின் திருவிளையாடல்களுக்கு பாலம் பலியாகிவிட்டது. பாலத்தைக் கடல விழுங்கிவிட்டது. அங்கு இப்பொழுது சதூண்கள் மட்டுமே காட்சிதருகின்றன,

## இடமாற்றங்கள்

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சிப் பகுதிக காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட் ஜனவரி மாதம் முதல் திருக்கோணமலைப் பகுதிக் காரியாதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார், வடமராட்சிப் பகுதிக்கு தற்போது கிளிநொச்சிப் பகுதிக் காரியாதிகாரியாகக் கடமையாற்றும் திரு. அ. க விசுவநாதன் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது,

∴ ∴ ∴

புலோலி அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த திரு. எஸ். பரமநாதன் பண்டாரவளை வைத்தியசாலைக்கும் திரு. எஸ். கதிர்காமத்தம்பி பதவிஉயர்வு பெற்று வட்டவளைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்த இடங்கட்கு ஜனவரி முதல் பண்டாரவளை வைத்தியசாலையைச் சேர்ந்த திரு. எஸ். சோமசுந்தரமும் யாழ்ப்பாணம் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் எஸ். ஜெயராசாவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# இராமேஸ்வரம் படகுச் சேவை மீண்டும் ஆரம்பம்

## மீட்பு வேலைகள் தொடருகின்றன

சென்னை, டிச. 27

கடல் கொந்தளிப்பு காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட இராமேஸ்வரத்துக்கு இன்று முதல் மீண்டும் படகுபோக்குவரத்துசேவைகள் ஆரம்பமாகின. இருந்தபொழுதிலும் இராமேஸ்வரத்தில் மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. இராமேஸ்வரத்திலுள்ள பல பகுதிகளில் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கிறது.

### பிரதமமந்திரி ரூபா 2000 நன்கொடை

இராமேஸ்வரத்தில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதற்காக பிரதமமந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி, தமது நிவாரண நிதியிலிருந்து 2000 ரூபாவை சென்னை முதன் மந்திரி திரு. பக்தவத்சலத்துக்கு அனுப்பியுள்ளார்.

விபத்து குறித்து சாஸ்திரி மிகுந்த கவலை தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரம் பகுதிக்கு அருகில் சென்ற செவ்வாய்க்கிழமை ஒரு புதிய தியேட்டர் திறந்துவைக்கப்பட்டது. இப்புயல் காரணமாக இந்தத் தியேட்டர் இடிந்து விழுந்து தரைமட்டமாகிவிட்டது. இரு பாடசாலைகளும் இங்கு இடிந்துவிழுந்தன.

# மன்னாரில் 3000 குடும்பங்கள் வீடிழந்து தவிப்பு

மன்னார், ஞாயிறு

சூறாவளியினாலும்பலத்தமழையினாலும் மன்னாரில் 3000 குடும்பங்கள் வீடற்று தவிக்கின்றன. இராணுவத்தினர் அவர்களை கஷ்டத்தில் நின்றும் மீட்டு அவர்களுக்குப் பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தும்வேலையில் ஈடுபடுவதற்காக கொழும்பிலிருந்து வந்த இராணுவத்தினர் சூறாவளியினால் ஏற்பட்ட நிலையைச் சரிப்படுத்துவதில் தமது முழுக்கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கின்றனர்.

முதலாவதாக தொற்றுநோய் பரவாமல் சுகாதாரப் பகுதியினருக்கு உதவி புரிந்து வருகின்றனர்.

இறந்தவரின் சடலங்களை மீட்பதிலும் இடங்களை துப்புரவு செய்வதிலும் ஒருபகுதி இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். தலைமன்னாருக்கும் மன்னாருக்கும் ஒருவித தொடர்புமில்லை என்று இராணுவ தலைமைக் காரியாலயத்திற்கு வந்த செய்தியொன்று கூறுகின்றது.

மன்னாருக்கும் தலைமன்னாருக்கும் உள்ள இணைப்புப் பாதை பல இடங்களில் பழுதடைந்திருக்கின்றது.

நேற்று உணவுப் பொட்டலங்கள் விமானமூலம் அகதிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

மன்னாரில் அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாக மற்றுமொரு செய்தி கூறுகின்றது.

திருமலை துறைமுகத்தில்

# ஒரு இயந்திர படகும் மிஞ்சவில்லை!

திருகோணமலை, ஞாயிறு

கண்டபயில் வீசிய சூறாவளியினால் திருக்கோணமலைத் துறைமுகத்தில் ஒரு இயந்திரப்படகும் மிஞ்சவில்லை. துறைமுகத்திலுள்ள 160 வள்ளங்கள் பாரிய சூறாவளியுடன் சிக்குண்டு காணாமற்போய்விட்டன. கடற்படையினருடைய 'கோட்டியா' என்ற கப்பல் இரண்டு இடங்களில் வெடிப்புடனும் தண்ணீரில் தாழ்ந்தும் காணப்பட்டது. 'விஜயா' என்ற மற்றுமொரு கப்பல் 3 அடி தண்ணீரில் தாழ்ந்து மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. கடந்தவாரம் கடற்படையினரின் உபயோகத்திற்காக கொடுக்கப்பட்ட இயந்திரப்படகுகளும் சேதமடைந்துள்ளன. தண்ணீரில் இருந்த இயந்திரப் படகு ஒன்றை தரையில் நிறுத்தி வைத்திருந்தபோது அது சூறாவளிக் காற்றினால் மிதந்து அகலம் இருக்கும் வீசப்பட்டு அதனுடைய இயந்திரமும் பழுதடைந்துவிட்டது.

முல்லைத்தீவுக்கருகில்

# 14 கரையோர கிராமங்கள் பெரும் சேதம்

வவுனியா, ஞாயிறு

வவுனியா மாவட்டத்தில் உள்ள முல்லைத்தீவு பட்டினத்தை அடுத்த 14 கரையோரக் கிராமங்களில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. சூறாவளியினால் முல்லைத்தீவு பட்டினம் முற்றாகக் கடல் தண்ணீர் சேர்ந்துவிட்டது. சூறாவளியினால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்ட வவுனியா மாவட்ட அதிபர் திரு. ஆர். எம். பீ. சேனநாயக்காவும், வவுனியா முன்னாள் எம். பீ. திரு. ரி. சிவசிதம்பரமும் வேண்டிய நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதிக் காரியாதிகாரி உடனடியாக பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விஜயம் செய்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

## பரீட்சார்த்திகள் கஷ்டம்

உடுப்பிட்டி, ஞாயிறு

சமீபத்தில் வீசிய பெரும் புயற்காற்றினால் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பரீட்சை மண்டபக் கூரை தூக்கி எறியப்பட்டு மறுநாள் ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சை எழுதும் மாணவர்கள் வேறு தனித்தனியான அறைகளில் பெற்றோமாக்ஸ் வெளிச்சத்துடன் பரீட்சை எழுதினர். இதுபற்றி உடனடியாக கல்விப்பகுதியினருக்கு அறிவிக்கப்பட்டு அதிகாரிகள் வந்து பார்வையிட்டுச் சென்றனர். மேலும் வடமராட்சியின் ஏனைய பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும் பரீட்சை எழுதும் மாணவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுள்ளனர்.

## இன்று நடைபெறும் கருத்தரங்கு

மாவிட்டபுரம், ஞாயிறு

மனித உரிமைகளுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை திங்கட்கிழமை மாலை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். தமிழ் பகுதிகளிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் கலந்து கொள்ளும் இக்கருத்தரங்குக்கு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமைவகிப்பார்.

## முன்னாள் எம். பி.க்கு பாராட்டு

உடுப்பிட்டி, ஞாயிறு

"வாணிகலைச்சமூகம் ஆண்டுதோறும் அநேக பண்டிதர்களையும் பாலபண்டிதர்களையும் உருவாக்கி வருகிறது. இதன் காவலரான உடுப்பிட்டி முன்னாள் எம். பி. திரு. சிவசிதம்பரம் இச்சமூகத்திற்கு ஆற்றிய பணி அளப்பரியது".

இவ்வாறு வாணிகலைச்சமூகத்தின் காவலரும் முன்னாள் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரத்தைப் பாராட்டுமுகமாக வாணிகலைச் சமூக மாணவர் மன்றம் நடாத்திய பாராட்டு வைபவத்திற்குத் தலைமை வகித்த பண்டிதர் திரு. சோ. இளமுருகனார் பேசுகையில் கூறினார்.

திரு. சிவசிதம்பரம் பேசுகையில், "பாராளுமன்றத்திற்குள் அரசாங்கம் எனது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நான் கருத்துக்கள் வழங்கியுள்ளேன். பாராளுமன்றத்திற்கு உள்ளே மட்டும் போராடி உரிமைபெற முடியாது என்பதை முன்பே உணர்ந்திருக்கிறேன். தமிழ் மக்கள் ஒருமித்து நடாத்தும் இயக்கம் என்ற கோதாவிலேயே நான் சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபட்டேன். அச்சமயத்தில் காக்கிச்சட்டைகளைக் கண்டு பயப்படாமல் இருந்தவர்கள் பெண்கள் என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்" என்றார்.

வித்துவான் திரு. வேலன் பேசுகையில், "கட்சிக் கட்டாலும் சீர்பெற்ற ஒன்று கண்டு என்பதைத் திரு. சிவசிதம்பரம் உணர்த்தினார்" என்றார்.

# கிளிநொச்சி பகுதியில் ஏற்பட்ட சேத விபரங்கள்

## பத்து லட்சம் ரூபா நஷ்டம்

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சிப்பகுதி குடியேற்றப்பிரதேசம் முழுவதும் சூறாவளியால் பாதிக்கப்பட்டு கடுமையான சேதத்துக்குள்ளாகியது. கணேசபுரம், ஜெயந்திநகர், 8-ம், 10-ம் வாய்க்கால், பரந்தன், குஞ்சுப்பரந்தன், உமையாள்புரம், வட்டக்கச்சி, இராமநாதபுரம், முரசுமோட்டை, தர்மபுரம், தேவிபுரம், அக்கராயன், வவுனிக்குளம், வன்னேரிக்குளம் ஆகிய குடியேற்றப்பிரதேசங்களிலுள்ள குடிசைகள், வீடுகள் எல்லாம் சூறாவளியினால் நாசம் செய்யப்பட்டன. மாமரம், தென்னை போன்ற வான்பயிர்கள் பிடுங்கியெறியப்பட்டன. பாடசாலைகள் பல இடிந்து கூரைகள் பிடுங்கப்பட்டன. கடைத்தெருவில் உள்ள கடைகளின் மேற்கூரைகள் பிடுங்கியெறியப்பட்டன. பொருட்சேதம் மிக அதிகம். சமார் 10 லட்சம்ரூபாய்க்கு மேல் சேதமென மதிப்பிடப்படுகின்றது.

### உணவுத்தட்டுப்பாடு

இங்கு வீடுவாசல்களை இழந்த மக்கள் வெளியேறிக்கொண்டிருக்கின்றார்கள். கடைகளில் உணவுப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் பாண் விலையும் அதிகரித்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் சென்ற 4, 5 நாட்களாக பூட்டப்பட்டுள்ளன. மக்கள் எதையும் வாங்கமுடியவில்லை. பொதுமக்கள், ஏழைகள் பட்டினியுடன் மிகவும் கஷ்டப்பட்டு பஸ்களிலும் வான்களிலும் யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருக்கின்றார்கள். குடியேற்றப்பகுதி ரோட்டுகள், பாதைகளில் மரங்கள் வீழ்ந்திருப்பதால் போக்குவரவு சாதனங்களை உபயோகப்படுத்தமுடியவில்லை. இந்த விதமாக பலவகையான கஷ்டங்களை குடியேற்றப்பகுதி மக்கள் அனுபவிக்கின்றார்கள்.

### திருடர் கைவரிசை

குடியேற்றப்பகுதியில் உள்ள வீடுகள் கூரைகள் பிரிக்கப்பட்டதினால் மக்கள் தங்கள் உடைமைகளை பாதுகாப்பதும் கஷ்டமாக உள்ளது. இதற்கிடையில் திருடர்கள் தங்கள் கைவரிசைகளைக்காட்ட ஆரம்பித்துள்ளனர். பிடுங்கப்பட்ட கூரைகளை வேய்வதற்கு கிடுகுகள் கிளிநொச்சியில் இல்லை. ஓடுகள் மிக அதிக விலையாகிவிட்டது.

முரசுமோட்டைப் பகுதியில் பல வீடுகள் நாசமாகிவிட்டன. தர்மபுரத்தின் சௌவுசாலை சரிந்தது. நவஜீவனம் வைத்தியசாலை சேதமடைந்தது. கிளிநொச்சியில் உள்ள இரண்டு சினிமா தியேட்டர்கள், சேதமடைந்தன. ஜெயந்திநகர் சௌவுசாலைமுற்றாகச் சேதமடைந்தது.

### பாடசாலைகள் சேதம்

உருத்திபுரம் மகாவித்தியாலயம் சேதமடைந்தன. அருணோதய மாதர்சௌவுசாலை சேதமடைந்தது. கத்தோலிக்க மகளிர் இல்லம் கூரை பிரிக்கப்பட்டது. பாத்திமா பாடசாலையில் மரம் விழ்ந்தது. 8-ம் வாய்க்கால் வீடுகளில் உள்ள ஓடுகள் அள்ளி வீசப்பட்டன.

காந்தி நிலையம் மாணவர் இல்லத்தில் உள்ள விடுதிக் கட்டடம், துப்புக்கயிற்றுத் தொழிற்சாலை, சமையல், சாப்பாட்டு கட்டடம், சௌவுசாலை, தையல் பயிற்சி நிலையம் முதலியன உபயோகிக்க முடியாதபடி கூரைகள் பிடுங்கப்பட்டன. அங்குள்ள அனாதரவான பிள்ளைகள் பக்கத்து வீடுகளில் தங்கியிருக்கின்றார்கள். இந்த விடுதியில் உள்ள பிள்ளைகளது உடைகள், படுக்கைகள் எல்லாம் சேதமடைந்தன. கத்தோலிக்க மாணவர் விடுதியில் உள்ள கட்டடம் ஒன்று சேதமடைந்தது.

சூறாவளி எதிரொலி

# தேயிலை வர்த்தகம் பாதிக்கப்படலாம்

திருக்கோணமலை, ஞாயிறு

சூறாவளிக் காற்றினால் திருக்கோணமலைத்துறைமுக வேலைகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்து விட்டன. இதன் காரணமாக 71 வீதம் தேயிலை ஏற்றுமதி நடைபெறுகின்றதும் இதனால் தேயிலைச் சந்தையில் நெருக்கடி ஏற்படலாம் எனவும் தெரியவருகின்றது. பலத்த சேதம் திருகோணமலையில் ஏற்பட்டதனால் துறைமுகத்தில் தேயிலை ஏற்றுமதி பலவாரங்கட்குப் பாதிக்கப்படலாம் என்று இலங்கை வர்த்தக சபையினதும் கொழும்பு தேயிலை வியாபாரிகள் சங்கத்தினதும் காரியதரிசி திரு கொலெட் பயஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 20 வீதத் தேயிலை ஏற்றுமதி, கொழும்புத் துறைமுகத்தினூடாக நடைபெறுகின்றது. கொழும்பு துறைமுகத்தொழிலாளர்கள் நடாத்தும் பகிஷ்கரிப்பின் காரணமாக துறைமுகத்தில் தாமதமாக வேலைகள் நடைபெறுகின்றன. இந்நிலையில் கொழும்புத் துறைமுகத்தில் தேயிலை ஏற்றுமதி நிலைமை மேலும் மோசமாகியுள்ளது.

## பாடசாலைக் கட்டடம் இடிந்து விழுந்தது

யாழ்ப்பாணம், திங்கள்

செவ்வாய்க்கிழமை இரவு ஏற்பட்ட புயலின் காரணமாக பெரியபுலம் தமிழ் அரசினர் பாடசாலையிலுள்ள இருபெரிய கட்டிடங்களும் தரைமட்டமாகிவிட்டன.

சம்பவம் நிகழ்ந்ததினம் இப்பாடசாலையில் நித்திரை செய்த தலைமை ஆசிரியராகிய கே. எஸ். திரவியம் தெய்வாதீனமாகக் காயமின்றி உயிர் தப்பினார்.

பாடசாலை இடிந்து விழுந்ததால் ரூ 60,000 நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

BAYER

புகையிலை—வெங்காயம்—மிளகாய்—கத்தரி—தக்காளி—முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு

மெற்றசிஸ்ரொக்ஸ் உடன்—டிப்ரெறெக்ஸ்

METASYSTOX DIPTEREX

கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத்தொடங்கவும்

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

# ரூ. 1,20,000 பெறுமதியான கைக்கடிகாரங்கள்
## சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்

பம்பாய், டிச. 27

ராஜ்யங்களுக்கிடையே கள்ளக்கடத்தல் பொருள்களை அனுப்பும் ஒரு கோஷ்டியின் கைவரிசையை பம்பாய் சுங்கப் பகுதியினர் கண்டுபிடித்துள்ளனர்.

சென்னைக்கு அனுப்பப்பட்ட ஒரு பார்ஸலை அவர்கள் கைப்பற்றி சோதனையிட்டபொழுது ரூபா 1,20,000 பெறுமதியான கைக்கடிகாரங்கள் அதில் இருந்தன. இவற்றை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்த வாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இதுபோன்ற சம்பவங்களில் இது மூன்றாவதாகும். "வெல்வெட்" துணி எனக் கூறி அனுப்பப்பட்ட பார்ஸல்களிலிருந்து 300 கடிகாரங்களை சுங்க அதிகாரிகள் அண்மையில் கைப்பற்றினர்.

## முன்னாள் எம். பி. பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

காணாமல்போன மீனவர்களைத் தேடுவதிலும் சடலங்களைத் தேடித் தனுஷ்கோடிக்குச்செல்வதிலும் பெரும் உதவி புரிந்ததற்காக காரைநகர் கடற்படைத் தளபதி அல்பிரட் பெரேராவை முன்னாள் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் பாராட்டினர்.

## போலியோ தடுப்பு மருந்து விநியோகம்

சுழிபுரம், திங்கள்

வலிகாமம் மேற்குப் பகுதியில் சிறுபிள்ளைவாத தடுப்பு மருந்து விநியோகிக்கும் வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சுகாதாரப் பகுதியினர் கிராமசேவையாளர் இல்லங்களிலும் மற்றும் பொது ஸ்தாபனங்கள் உள்ள இடத்திலும் தடுப்புஊசி போடுவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

## கட்டுப்பணம் கட்ட முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழரசு அபேட்சகர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் கட்டுப்பணத்தைக் கட்டுவதற்காக சங்கானைத் தமிழரசு வாலிப முன்னணியினர் வீடு வீடாகச் சென்று தேர்தல் நிதி திரட்டி வருவதாக அறியப்படுகிறது.

⁘ ⁘ ⁘

கோப்பாய்த் தொகுதியில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடவிருக்கும் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையின் கட்டுப்பணத்தை புத்தூர், அச்சுவேலி, நீர்வேலி, உரும்பிராய், கோப்பாய் ஆகிய இடங்களிலுள்ள கட்சிக் கிளைகள் சேகரித்துக் கட்டுவதெனச் சமீபத்தில் நடைபெற்ற மேற்படி கிளைகளின் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

⁘ ⁘ ⁘

பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிடவிருக்கும் முன்னாள் எம். பி. திரு. க. துரைரத்தினத்துக்கு இன்பருட்டி கடல் தொழிலாளர்கள் கட்டுப்பணம் கட்ட முன்வந்துள்ளதாக அறியப்படுகிறது.

⁘ ⁘ ⁘

நல்லூர் தொகுதியில் போட்டியிடவிருக்கும் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனுக்கு பொதுமக்கள் சார்பாகத தாம் கட்டுப்பணம் கட்டுவதற்கு கொக்குவில்-கோண்டாவில் தமிழரசுக் கட்சிக் கிளை ஸ்தாபனத்தைச் சேர்ந்த சில பிரமுகர்கள் முயற்சி மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

⁘ ⁘ ⁘

உடுவில் தொகுதியில் போட்டியிட விருக்கும் திரு. தருமலிங்கத்திற்கும் கட்டுப்பணம் சேர்க்கும் பணியில் தமிழரசுக் கட்சி வாலிபர்கள் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

## அண்ணா கழகம் வெற்றி

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரி அண்ணா விளையாட்டுக் கழகத்திற்கும் அச்சுவேலி விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் அண்ணா கழகம் 3—1 புள்ளிகளால் வெற்றிபெற்றது.

அண்ணா கழகத்தைச் சேர்ந்த கணபதிபிள்ளை, துரைச்சாமி இருவரும் திறமையாகவும் பாராட்டத்தக்க விதத்திலும் விளையாடினார்கள்.

## 'ரஷ்ய வளர்ச்சிக்கு வித்திட்டவர்'
### ஸ்டாலின் விழாவில் பேச்சு

உடுப்பிட்டி, ஞாயிறு

1879-ம் ஆண்டு ஜோஜியா இனத்திற் பிறந்த ஸ்டாலின் பாடசாலையில் கல்வி பயிலும்போதே மாணவர் இயக்கங்களுக்குத் தலைமை தாங்கி அவர்களைப் புரட்சிப் பாதையில் வழி நடத்திச் சென்றார். 1905-ல் ரஷ்யாவிலேயே முதன் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்து நடத்தி அதில் தோல்வி ஏற்பட்டபோதிலும் அத்தோல்வியே 1917-ம் ஆண்டு வெற்றிக்கு அடிகோலியது. ரஷ்ய மொழியில் 'ஸ்டாலின்' என்றால் இரும்பு என்று அர்த்தமுள்ள இப் பெயரை திரு. லெனினே சூட்டினார். லெனின் இருக்கும்போதே அவரது வாரிசாக கட்சியினரின் ஏகோபித்த ஆதரவுடன் கட்சியின் பொதுக்காரிய தரிசியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஸ்டாலின் 1922 தொடக்கம் 1953 வரை கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ரஷ்யாவுக்கும் தலைமை தாங்கி 17 நாடுகள் ஒருமித்து ரஷ்யாவுக்கெதிராராய் படையெடுத்தபோதும் அவற்றைத் தனித்து நின்று முறியடித்து முதலாவது சோஷலிச சோவியத் நாட்டையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் பாதுகாத்தான்."

இவ்வாறு செல்விபடி கம்யூ

(5-ம் பக்கம் பார்க்க)





பார்(f)பும்
நிர் 8
ஓடிக்
கோலான்

இதோ இலங்கையர் பிரீதியுடன் பாவிக்கும் ஓடிக்கோலான் பார்(f)பும். பார்(f)பும் இலேசாக நறுமணமூட்டப்பட்டது. புத்துணர்ச்சியும், தெம்பும் சரியாக நல்கவல்லது. நோயுற்றவேளையிலோ அல்லது பொதுவாக தூய்மையாகவிருக்கவோ இது உங்களுக்கு அவசியப்படும் ஸ்நானத்திற்குப் பிறகு, வைபவத்திற்குப் போகுமுன், கடுமையான டெனிஸ் விளையாட்டுக்குப் பின்னர் அல்லது அலுவலகத்தில் இதனைப் போன்ற சிறந்த துணைவேறென்றுமிருக்க முடியாது.

பார்(f)பும் வெகு நேர்த்தியான ஸ்ட்ரீம்லைன் போத்தலில் அடைக்கப்பட்டுள்ளது. இதன் பெயரை சொல்லியே கேளுங்கள். எப்பொழுதும் கைவசமாக ஒரு போத்தலை வைத்திருங்கள்.

எல்லா பெரிய வியாபாரிகளிடமும் நான்குவித அளவுகளில் கிடைக்கும்.

பார்(f)பும் லிமிட்டெட்டின் ஒரு தரமிக்க தயாரிப்பு.

AR 2/63 MAS

ராஜா சினிமா
(சுழிபுரம்)
கல்யாணகுமார்-தேவிகா
நடிக்கும்
நெஞ்சம் மறப்பதில்லை

REGAL — JAFFNA
NOW SHOWING
Kerwin Mathews
in
THE PIRATES
OF
BLOOD RIVER
(Eastman color)

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன் 485
மனோகர்-பண்டரிபாய்
நடித்த
புனிதவதி

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி — பிளாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)
மற்றும் 4 திரைகளில்
நடிகர்திலகம்
சிவாஜிகணேசன்
கொடைவள்ளல் கர்ணனாக நடிக்கும்
பத்மினி பிக்சர்ஸ்
கர்ணன்

5-வது மகத்தான வாரம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத
பிரபல பின்னணி பாடகர்
டி. எம். சௌந்தரராஜன்
நடிக்கும்
பட்டினத்தார்
சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன் கே. சோமு

## மாணவர் தேர்ச்சி சங்கக் கூட்டம்

சழிபுரம், ஞாயிறு

பண்ணாகம் தெற்கு மாணவர் தேர்ச்சிச் சங்க வருடாந்தக்கூட்டம் ஸ்ரீமுருகன் வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்றது. சங்க அறிக்கைகள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் சங்கத்தால் செய்யப்படும் ஆண்டுப் பஜனையை தைமாதம் 22-ம் திகதிவிசேஷமாக நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் புதுவருடஉத்தியோகஸ்தர் தெரிவும் நடைபெற்றது. தலைவர்- அ. தி. அப்புத்துரை, உபதலைவர்- ஆ. சிவசண்முகம், காரியதரிசி- ம. தவராசா, உபகாரியதரிசி- அ. பரமசிவம், தனாதிகாரி- ப. சற்குரு, நிர்வாகசபை உறுப்பினர்- பொ. கறுவல்தம்பி, த. ஆறுமுகசாமி.

## நகரசபை இடைத்தேர்தல் முடிவு

சாவகச்சேரி ஞாயிறு

நேற்று நடைபெற்ற சாவகச்சேரி நகரசபையின் 9-ம் வட்டார உப-தேர்தலில் திரு. வை. தர்மலிங்கம் வெற்றி பெற்றார். முன்னாள் சாவகச்சேரி கிராமசபைத் தலைவரும், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் 9-ம் வட்டார அங்கத்தவருமான திரு. பொ. அருணாசலம் 15 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

திரு. தர்மலிங்கத்திற்கு 879 வாக்குகளும், திரு. அருளம்பலத்திற்கு 864 வாக்குகளும் கிடைத்தன. இந்த வட்டாரத்தின் மொத்த வாக்காளர் தொகை 879.

## "ரஷ்யவளர்ச்சிக்கு..."

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லிஸ்ட் வாலிபர் சங்கத்தினரால் ஸ்டாலின் 85-வது பிறந்ததினவிழா கொண்டாடப்பட்டபொழுது திரு.சப. இளங்கீரன் மேற்கண்டவாறு கூறினார்.

திருவாளர்கள் கே. வரதராஜன், எஸ. இராசேந்திரன் ஆகியோரும் பேசினர்.

ஸ்டாலினின் 85-வது பிறந்ததின நினைவையொட்டிய விசேட வெளியீடாக, "தொழிலாளி வர்க்கமும் தொழிலாளி வர்க்கக் கட்சியும்" என்ற நூல் விநியோகிக்கப்பட்டது. இப் புத்தகம் 1905 ஜனவரி 1-ல் திரு. ஸ்டாலின் "தொழிலாளியின் போராட்டம்" என்ற பத்திரிகையின் 8-வது இதழில் எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பாகும்.

## இந்து வாலிபர் சங்கம் அங்குரார்ப்பணம்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்தறைத் தெணிப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் திரு. வே. காசிநாதன் தலைமையில் தெணி இந்து வாலிபர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சங்க உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பொறுப்பாளர்கள்: திரு. வ. க. இரத்தினசபாபதி, திரு. பொன். செல்லையா, திரு. வே. கனகசிங்கம், தலைவர்: திரு. வே. காசிநாதன், உபதலைவர்: செல்வன் வ ஆறுமுகசாமி, காரியதரிசி செல்வன் சி. பத்மநாதன், உபகாரியதரிசி: செ நடராசா, தனாதிகாரி: இ. சிவசுப்பிரமணியம்.

கூட்ட முடிவில் தெணிப்பிள்ளையார் கோவிலில் பூங்காவனம் அமைத்தல், அடியார்கட்கு இலவச தீட்சை கொடுத்தல், வீதிகள் திருத்துதல் திருப்பணி வேலைகளின் முன்னேற்றம் முதலான விஷயங்கள் பற்றி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஆசிரியருக்கு பாராட்டு

உடுவில், ஞாயிறு

கடந்த 35 வருட காலத்துக்கு அதிகமாக ஆசிரியராகவும், தலைமையாசிரியராகவும் கடமையாற்றிய உடுவிலைச் சேர்ந்த திரு. எஸ். கே. பத்திநாதன் இம்மாதம் இளைப்பாறுகிறார்.

கடந்த காலத்தில் இவர் பல பாடசாலைகளில் கடமையாற்றி பெற்றோர்களினதும் சக ஆசிரியர்களினதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். இவரது 25 வருட சேவையை முன்னிட்டு அண்மையில் ஆசிரியர் சமூகம் இவரைப் பாராட்டிக் கௌரவித்தது. உடுவில் மல்வம் பாடசாலையின் ஆசிரியர் குழு அண்மையில் அன்னாருக்கு பிரியாவிடை அளித்துக்கௌரவித்தது.

திரு. எஸ். கே. பத்திநாதன் முன்னர் உடுவில் கிராம சபையில் அங்கத்தவராகவும் வலிகாமம் வடக்கு ஆசிரியர் சங்கத்தலைவராகவும் கடமையாற்றினர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## சித்த ஆயுள்வேத வைத்தியர் சங்கம்

சழிபுரம், ஞாயிறு

வடபகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் சேவை செய்யும் சித்த ஆயுள்வேத வைத்தியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ். வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

திரு. எஸ. வி. மாணிக்கவாசகர் வைத்தியர் சங்கத்தின் சேவையையும் அதன் கடமையையும் எடுத்து விளக்கினார்.

பின்னர் நடைபெற்ற புதிய உத்தியோகத்தர்கள் தெரிவில் வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் போஷகராகவும் ஆயுள்வேத வைத்தியர் ஏ. வைலாசபிள்ளை தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கொடிகாமத்தில் இலவச வைத்தியசாலை

கொடிகாமம், திங்கள்

கொடிகாமத்தில் இலவச ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றை நிறுவ கச்சாய் கிராம சபை ஏற்ற ஒழுங்குகள் செய்துவருகிறது.

ஜனவரி 1-ம் திகதி ஆயுர்வேத வைத்தியர் வந்து சேருவாரென்றும், கச்சாய் கிராம சபையின் பழைய காரியாலயத்தில், இவ்வைத்தியசாலை தற்காலிகமாக நிறுவப்படுமென்றும் அறியப்படுகிறது.

கச்சாய் கிராம சபையின் வரவு செலவு திட்டத்தில் இலவச ஆயுர்வேத வைத்தியசாலைக்காக 6000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலையை விரைவில் ஆரம்பிக்க கச்சாய் கிராமசபை தலைவர் திரு. தி. க. சிதம்பரப்பிள்ளை ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

## பிரயாண கஷ்டம்

வவுனியா, ஞாயிறு

அண்மையில் வீசிய சூறாவளி காரணமாக வவுனியாப் பகுதியிலுள்ள கிராமங்களிலிருந்து மக்கள் கதியற்றவர்களாய் கால்நடையாக வவுனியா காடுகள் ஊடாக பிரதான வீதிகளுக்கு வருகிறார்கள். தெருக்களும் றெயில்பாதைகளும் வெள்ளத்தினால் அள்ளப்பட்டுவிட்டன, கடல்மட்டம் ஏறியதால் பல நூற்றுக்கணக்கான வீடுகளும் வெள்ளத்துடன் சேர்ந்து அள்ளப்படக்கூடிய பொருள்களும் தண்ணீரில் அமிழ்ந்துவிட்டன. வவுனியா மன்னார்பாதையில் ஓடும் இ. பொ. ச. பஸ் வண்டிகள் முருங்கனூர்வரைமட்டும் இப்போது ஓடுகின்றது. திருக்கேதீஸ்வரத்திலுள்ள மடங்கள் யாவும் அந்த இடத்தைச் சுற்றியுள்ள அகதிகளுக்காக உபயோகிக்கப்படுகின்றன.


### மகாகடவுள் ஆணையும்!! சூறையின் அற்புத வேகமும்!!

சூறையாவது:- சுழல்காற்று "எண்தோள் வீசிநின்று ஆடும் பிரான்" ஊழிக்காலமாக சிவ சாம்பிராச்சியத்தின் ஆதிக்கத்தைப் பஞ்சகிருத்திய திருநடன மூலம் விளக்குகின்றான்!!!

புண்ணிய காட்சி, கடவுட் கட்சி, காயத்திரி தியானஞ் செய்து ஆன்மநோய் மாற நிற்கும் ஆண் பெண் பகுப்பான உத்தம உலகில், இத்தனைக்கும் முட்டுக்கட்டையான, ஆடம்பர அநியாய அக்கிரமப் பாவத்தோரை மட்டஞ்செய்து உண்மைச் சமதர்மத்தையும் - மகாகடவுட் கட்சியையும் விளக்க, சூறைக்காற்றுவீசியடி, யந்திரயுத்திப பெலன்-மனிதபடைப் பெலன் - பாவப் பணபெலன் பலருக்கும் ஒருபோதும் உதவாது, புண்ணியத் 'தவச்செல்வர் செல்விகளை' ஆகரியுங்கள் என்று (22-12 64) இக்காற்றுக் கூறிபோயுள்ளது! அறிவு வருமா? தமிழர் மகாதேசியம் மாசற்றது!!

சன்மார்க்க தவகூடம்,
கந்தரோடை. 1871



### ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணி

ஈழம் : எங்கள் தெய்வம்
ஈழப்போர் : எங்கள் தர்மம்
ஈழவெற்றி : எங்கள் சுவாதீனம்.
ஈழத்தமிழ் இனமே! எங்கள் கதி என்ன?

1965 பொதுத் தேர்தல் கூட்டங்கள்

பிற்பகல் 5-8 க்கு மிடையில் கீழ்க்காணும் திகதிகளில் நடைபெறும்.

| திகதி | இடம் | திகதி | இடம் |
|---|---|---|---|
| 28-12-64 | மன்னார்நகரசபை மண்டபம், | 30-12-64 | கிளிநொச்சி-கரடிப்போக்குச் சந்தி. |
| | | 31-12-64 | யாழ்ப்பாணம் நகரசபை மண்டபம். |
| | | 1-1-65 | காங்கேசன் துறை-மாவிட்டபுரம் சந்தி. |

ஈழத் தமிழ் இனத்தவர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

செ. சுந்தரலிங்கம், தலைவர்.
செ. சரவணமுத்து, செயலாளர்



### ஏல விற்பனை

நல்ல நிலையிலுள்ள பாவித்த லொறி ரயர்கள் டி. நீர்வேலி சமாசத்தில் விற்பனைக்குண்டு. 2-1-65 ம் திகதி காலை 9-30 மணியளவில் டி நீ வேலி சமாசத்தில் அவை ஏலத்தில் விற்கப்படும். ரயர்களை கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம்.

தலைவர்
வலி. கிழ. பலநோ. சமாசம், நீர்வேலி.
24-12-64. 1241

### புதிய இந்துசமய நூல்
(இரண்டாம் பதிப்பு)

1965-1966-ம் ஆண்டு G C. E சைவசமயபாடப பரீட்சைக்குரிய பாடத்திட்டம் முழுவதும் அடங்கியது.

ஆக்கியோன் - சபாரத்தினம்
வெளியிடுபவர்:- சி. மங்கலநாயகம். வட்டுக்கோட்டை,
அச்சுப்பதிவு:- சண்முகநாதன் அச்சகம்.
மொத்தவிற்பனையாளர்கள்:- தனலக்ஷ்மி புத்தகசாலை - சுன்னாகம்.
கலைவாணி புத்தகசாலை - சண்டி & மட்டக்களப்பு.
1360 விலை ரூபா: 2-50

### KALAIVANI ELECTRICAL UNDERTAKINGS

Evening and Week - end Classes with practical training during day time.

Electrical Wiring, Local Govte Service Electrical Foreman's Examination

Electrical Engineering practice, City and Guilds London-Preliminary, Intermediate and Final.

A. M I E E Part II for Pcbysics Graduates, Graduateship Examination of the Institution of Electronic and Radio Engineers. London.

Ancillary Classes in Mathematics Physics and Engineering Drawing.

Classes will commence on 18th January 1965. Applications stating present qualification should be sent to the secretary on or before 15th January 1965.

Secretary,
Kalaivani Electrical Undertakings,
K. K. S. Road,
Mallakam. 1240

### Tuition

Effective Tuition in Pure & Applied Maths. Physics Chemistry Botany & Zoology for G. C E. (O L) in Chundikuli Area Homes Visited Apply to R, K. Sarma 84 Colombuthurai Road, Jaffna 1358

### COLLEGE OF HIGHER STUDIES
Anaipanthy—Jaffna

Classes in Building construction Draughtsmanship including Drawing plans sections and elevations to scale taking out Quantities and fraraming Estimates with dat for labour and materialsa commence on the 6th January 1965.
1196 Apply Registrar

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம், மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்று லோக் இலும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50

வைத்தியர் பரிபூரணநாதர்
கைலாயபிள்ளையார்கோவிலடி யாழ்ப்பாணம்.

### வரி விளம்பரம்

விற்பனைக்குத் தயார்!

தமிழரசுத்தலைவர்களின் உருவப்படத்துடன் பொங்கல் வாழ்த்துகள். விபரங்கட்கு: ஆர். நாராயணசாமி, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1369

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள நெசவு நிலயத்திற்கு நெசவில் தேர்ச்சிபெற்றவர்களும், நெசவில் பயிற்சி பெற விரும்புவோர்களும் (பெண்மணிகள் மட்டும்) தேவை. உடன் நேரில் விண்ணப்பிக்கவும் உணவு, தங்குமிட வசதிகள் அளிக்கப்படும்.

கைலாசபிள்ளையார் நெசவுத் தொழிற்சாலை, 327, நாவலர் வீதி (வைமன் ரோட் சந்தி) 1352

எமது தொழிற்சாலையில் கடமையாற்றுவதற்கு ஒரு 'சேல்ஸ்மன்' தேவை. விண்ணப்பிக்கவும். குமர் இன்டஸ்ரீஸ், 123, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம். 1361

சில்லறைக் கடையை நிர்வகிக்க திறமைசாலி ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும். யாழ்ரன்ஸ் - லொறீஸ் 1359

### போறனை விற்பனவு

தெல்லிப்பழை சிகரெட் புகையிலை ஐக்கிய சங்கத்தின் (மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியில்) போறணைகள் இரண்டும் ஒலை கொட்டிலொன்றும 31-12-64 காலை பத்து மணியளவில் ஏலத்தில் விற்கப்படும். மேற்படி சங்கத்தில் முப்பதினாயிரம் சிகரெட் புகையிலை காற்றுகள் உடனடியாக விற்பனைக்குண்டு. கா. தம்பு, தலைவர். 1362

### கல்வி

பெண்களுக்கு மட்டும். தட்டெழுத்து சுருக்கெழுத்து ஆங்கிலத்தில், தமிழில், சிங்களம், கணக்கு பதிவியல் ஆங்கிலம். ஜி. சி. இ. சாதாரணம், மேல் தரம் கலை, விஞ்ஞானம், வர்த்தகம், தையல். தினசரி காலை மாலை வகுப்புகள். எல்லாப் பாடங்களும் ஒரே இடத்தில் இரு மொழிகளிலும் பயிற்றப்படும். யாழ். கல்லூரி, 29, பருத்தித்துறைரோட்டு, யாழ்ப்பாணம். 1350

### குத்தகைக்கு

நூறு பரப்பு காணி, வீடு, இரு கிணறுகள் தென்னை முதலியவற்றுடன் மாதகலில் குத்தகைக்கு உண்டு. தோட்டக்காணியாகவும் பாவிக்கலாம். விபரங்கட்கு: 476, ஆஸ்பத்திரி வீதி, சண்டிகுளி, யாழ்ப்பாணம் 1365

### அந்தியேட்டி அறிவித்தல்

சரவணை - காளிகோவில் கந்தசுவாமி ஆலயத் தொண்டரும், பொதுநல ஊழியரும், செல்லம்மா, இராசம்மா, இராசையா, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அருமைத் தந்தையும், பொன்னுச்சியின் அன்புக்கணவரும் ஆகிய சரவணையூர் ஐயம்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டி வைபவம் 29-12-64 அன்று காலை 8 மணியளவில் நீரிமலையில் நடைபெறும். அனைத்து நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் வைபவத்தில் பங்குபற்ற வேண்டப்படுகின்றனர்.

அறிவிப்பாளர்: வே. இராசையா (முன்னாள் கிராமசபை உறுப்பினர்) 'அருளகம்'

மக்கள்: செல்லம்மா, இராசம்மா, இராசையா, கிருஷ்ணபிள்ளை.

மருமக்கள்: பொன்னுத்துரை, கந்தையா, வலமணி, சொர்ணம்மா.

சரவணை, வேலணை. 24-12 64
1868

# "1-ம் எதிரி வெளியில்வந்து காலால் என்னை உதைத்தார்"

## துணுக்காய் கொலைமுயற்சி வழக்கில் காயமடைந்தவர் சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்

துணுக்காய் கொலை முயற்சி வழக்கில் காயமடைந்தவரின் சாட்சியத்தை பதிவுசெய்ய யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் வந்தபோது பெருந்திரளான மக்கள் திரண்டுவிட்டனர். மாஜிஸ்டிரேட்டின் உத்தரவுப்படி இன்ஸ்பெக்டர் சகாயம் ஜனக்கூட்டத்தைக் கலைத்து ஒழுங்கை நிலைநாட்டினார்.

இவ்வழக்கில் எஸ். தங்கராசா, வேலுப்பிள்ளை வடிவேலு ஆகியோர் தம்பையா சிவஞானம் என்பவரை 20-10-64-ல் கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சி. கதிரவேலு ஆஜரானார், 2-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு ரி. கணேசலிங்கம் திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானார் வழக்காளிதரப்பில் திரு. வி கனகசபையின் உதவியுடன் இன்ஸ்பெக்டர் திரு. சகாயம் வழக்கை நடத்தினார்.

காயமடைந்த தம்பையா சிவஞானம் (வயது 44) சாட்சியமளித்தபோது கூறியதாவது: துணுக்காயிலுள்ள நீர்ப்பாசன நிலயத்தில் கடமையாற்றினேன். 20-10-64-ல் நான் வவனிக்குளத்திற்குச் சென்றேன். அங்கிருந்து மாங்குளம் சென்றேன். இரவு 8-30 மணிக்கு துணுக்காய்க்கு சென்றேன். 2-வது எதிரியின் கடையில் சாப்பிட்டேன். 2-ம் எதிரியை ஒலிவர் என்று அழைப்பது வழக்கம். நான் நீர்ப்பாசன இலாகாவில் கடமையாற்றுவதாக 2-ம் எதிரியிடம் கூறினேன். 2-ம் எதிரி தனக்கு என்னைத் தெரியாதெனக் கூறினார் நான் உடனே அவரை தாக்கமுயற்சித்தேன். அதன்பின் 1-ம் எதிரியும் வந்து தாக்கினார். நான் கடையிலிருந்து வெளியில் சென்றேன் 1-வது எதிரி கடைக்குவெளியில் வந்து எனது நாடியில் காலால் உதைத்தார் அதன்பின் நான் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டேன் இதனால் நான் காயமடைந்தேன்.

மீண்டும் இவ்வழக்கு இன்று காலை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## திருவாசக விழா

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரி திவ்வியஜீவன சங்கத்தினரின் ஆதரவில் சரசாலை - நுணுவில் சிதம்பர விநாயகா ஆலயத்தில் திருவாசகத் தேன்விழா நடைபெற்றது. நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைமைவகித்தார். விழாவில் தென்சமூக சேவாசங்க சமாஜக் காரியதரிசி வித்துவான் சபாரத்தினம் உட்பட வேறு சிலரும் சொற்பொழிவாற்றினர். விழாவிற்கு முன்னர் சரசாலை இலந்தைத் திடல் வீரமாகாளியம்மன் கோயிலிருந்தும், கிராய்புவில் முருகமூர்த்தி கோயிலிருந்து, மட்டுவில் வடக்கு மருதடி விநாயகர் கோயிலிருந்தும் திருவாசக ஊர்வலங்கள் புறப்பட்டு விழா நடைபெறும் கோயிலை அடைந்தன.

## அகண்டநாம பஜனை

சாவகச்சேரி, ஞாயிறு

வடபகுதியில் மழையில்லாது பயிர்கள் அனைத்தும் சேதமடைந்துள்ளமையினால் மழையை வருவிப்பதற்காக இணைமடு கனகாம்பிகை அம்மன் கோவிலில் சென்ற ஞாயிற்றுக்கிழமை 6 மணி முதல் விடியற்காலை 5 மணிவரை ஆத்மஜோதி நா. முத்தையா, திரு. வடிவேல் சாமியார் இருவரின் தலைமையிலும் அகண்ட நாம பஜனை நடைபெற்றது. அபிஷேகத்தில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## காரைநகருக்கு வெற்றி

ஊர்காவற்றுறை, ஞாயிறு

ஊர்காவற்றுறை நேஷ்செஸ் கோஷ்டிக்கும், காரைநகர் தெரிவுக் கோஷ்டிக்குமிடையே அண்மையில் நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் காரைநகர் கோஷ்டி 3—1 கோல்களால் வெற்றியீட்டியது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. யோசப் மரியதாஸ் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.


'ஈழநாடு'

தினக்குறிப்பு

1965

விற்பனையாகின்றது

விலை ரூபா 1-50.


## "பரீட்சைகள் தகுதியற்றவை"

நல்லூர், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சைவப்புலவர் தேர்வு முறையற்றதென அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை சைவசித்தாந்த மகா சமாஜம் நடத்தும் சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர், புகுமுகத் தேர்வுகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது பற்றி கருத்துவேறுபாடுகள் தோன்றியுள்ளன.

சென்னை சைவசித்தாந்த மகாசமாஜம் வருடந்தோறும் நடத்திவரும் மேற்படி பரீட்சைகள் கடந்த மாதம் 29-ம் திகதி இந்தியாவில் நடத்தப்பட்டன. 28-ம் திகதி வெளியான விடைத்தாள்களைக் கொண்டு அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம் யாழ்ப்பாணத்தில் ஒரு வாரம் கழித்து பரீட்சைகளை நடத்தி விடைத்தாள்களை சைவசித்தாந்த மகாசமாஜத்திற்கு அனுப்பியுள்ளது. இவ்வாறு பரீட்சை நடத்தப்படுவது முறையற்ற செயல் என்று பரீட்சைக்குத் தலைமைவகிக்க ஒப்புக்கொண்டு பின்னர் மறுத்த வைத்தீஸ்வரவித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் அறிவித்துள்ளார்.

இவ்வாறு ஒழுங்கற்ற வகையில் பரீட்சை நடத்துவதனால் பரீட்சையின் பலனாக கிடைக்கும் பட்டங்கள் தகுதியற்றதாகிவிடும் என சைவப்புலவர் பட்டதாரிகள் சங்க உபதலைவர் வித்துவான் இ. திருநாவுக்கரசு சென்னை சைவசித்தாந்த மகாசமாஜத்திடம் முறைப்பாடு செய்துள்ளார்.

## மீட்பு வேலைகள் முடிவடைகின்றன

சென்னை, டிச. 27

இராமேஸ்வரம்தீவில் கடந்த நான்கு தினங்களாக நடைபெற்றுவரும் பாதுகாப்பு, மீட்பு வேலைகள் இன்றிரவுடன் முடிவடையுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று பிற்பகல் வரை இன்னலுற்று தவித்த 250 பேரை இந்திய கடற்படைக் கப்பல் மீட்டது.

## ராதாகிருஷ்ணன் அனுதாபம்

புதுடில்லி, டிச. 27

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வீசிய சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து இலங்கை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவுக்கு இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அனுதாபம் தெரிவித்து செய்தியொன்று அனுப்பியுள்ளார். புயலினால் இன்னலுறும் மக்களுக்கு தமது அனுதாபத்தை தெரிவிக்கும்படியும் அவர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

## இலங்கை-இந்திய தந்தித்தொடர்பு இல்லை

கொழும்பு, ஞாயிறு

கடந்த புதன்கிழமை முதல் இலங்கை—இந்திய தந்தித் தொடர்புகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன.


வாலிபர்களுக்கு மட்டும்

சாவகச்சேரி தொகுதியில் பாரிஸ்டர் எம். சிவானந்தனை ஆதரித்து தேர்தல் பிரசாரம் செய்யவிரும்பும் வாலிபர்கள் உடனே தொடர்புகொள்ளவும்.

க. கனகரத்தினம், வாலிப முன்னணித் தலைவர், மீசாலை.

1370


## 24 ஆங்கில தினசரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 24 சஞ்சிகைகளை நிறுத்துவதின் மூலம் மிச்சமாகும் பணத்தை, புதிய தமிழ் சஞ்சிகைகளை வரவழைப்பதற்கு உபயோகிக்க வேண்டும் எனவும் கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

தற்போது பொது நூலகம் வரவழைக்கும் 100 சஞ்சிகைகளில் வார சஞ்சிகைகள், மாத சஞ்சிகைகள், மாதம் இருமுறை சஞ்சிகைகள், மூன்று மாதத்துக்கு ஒருமுறை வெளியாகும் சஞ்சிகைகள் ஆகியன அடங்கும்.

கலைமகள், அமுதசுரபி, கலைக்கதிர், மஞ்சரி, மாதஜோதிடம், அணுக்கதிர் ஆகிய 7 மாத சஞ்சிகைகளும் குமுதம், கல்கி, ஆனந்தவிகடன், சுதேசமித்திரன் ஆகிய 4 வார சஞ்சிகைகளும் ஆக மொத்தம் 11 தமிழ் சஞ்சிகைகள் தற்போது வரவழைக்கப்படுகின்றன. நிறுத்தப்படும் ஆங்கில சஞ்சிகைகளுக்குப் பதிலாக மேலும் பல புதிய தமிழ் சஞ்சிகைகள் இடம் பெறவிருக்கின்றன.

தற்போது பொது நூலகத்தில் 20,000 புத்தகங்களுக்கு மேல் கையிருப்பிலிருக்கிறது. அதேசமயம் 25,000 புத்தகங்கள் வாசகர்களின் வசம் இருக்கின்றன.

இந்த ஆண்டு 548 புதிய புத்தகங்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன. பொது நூலகத்தில் 2000 க்கு மேற்பட்ட வாசகர்கள் அங்கத்தினர்களாகியிருக்கிறார்கள். இவ்வாண்டு 256 பேர் புதிதாக அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள்.

## வட, கிழக்கு பகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### விமானமூலம் உணவு விநியோகம்

கடந்த வெள்ளிக்கிழமையும் நேற்றும் மன்னாருக்கு விமான மூலம் உணவு விநியோகிக்கப்பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீது விமானம் பறந்துசென்று நூற்றுக்கணக்கான உணவு பொட்டலங்களை விநியோகித்தது. இன்று மூன்று விமான சேவைகள் இங்கு நடைபெற்றன.

நேற்று இலங்கைக் கடற்படைக் கப்பலான "கஜபாகு" கொழும்பிலிருந்து மன்னாருக்கு புறப்பட்டு இன்றுமாலை மன்னார் போய்ச் சேர்ந்தது. இந்தக் கப்பலில் அத்தியாவசிய உணவுகளான அரிசி, மாவு சீனி, பருப்பு, மிளகாய் உட்பட மருந்துவகைகளும் கொண்டு செல்லப்பட்டன.

### தொடர்பு துண்டிப்பு

மன்னார் இன்னும் மற்றைய பகுதிகளுடன் தொடர்பற்றிருக்கிறது. வானொலிமூலம் மட்டுமே மன்னாருடன் தொடர்பு கொள்ளக் கூடியதாகவிருக்கிறது.

### திருமலையில்

திருக்கோணமலையில் தற்பொழுது உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. திருமலை நகரில் ஒரு றாத்தல் பாண் ஒரு ரூபாவுக்கும் ஒருறாத்தல் சீனி இரண்டு ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. இங்குள்ள வீடுகள் கொள்ளையடிக்கப்படுவதாக செய்திகள் கூறுகின்றன.

திருக்கோணமலைக்கு 4,000 மூடைகள் சீனியும் 5,000 மூடைகள் மாவும் அனுப்ப உணவுப்பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட சூறாவளி, வெள்ள சேதத்துக்கு உதவிகள் அளிக்க அமெரிக்கா, சீனா, ஐக்கிய அரபுக்குடியரசு, மேற்குஜெர்மனி ஆகிய நாடுகளின் அரசாங்கங்கள் முன்வந்துள்ளன. எந்த மாதிரியான உதவிகளை அனுப்ப வேண்டுமென்று இந்த நாடுகள் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

## கடற்படைத் தளபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும், வலைகளையும் ஆட்களையும் இழந்த குடும்பத்தினருக்கு உடனடியாக நிவாரணமளிக்கவேண்டுமென்றும குடும்பத்தில் மூத்தோரை இழந்தவர்களின் மீதியாய் இருக்கும் தொழில்பார்க்க வயது கட்டுப்பாடில்லாமல் இளைஞர்களுக்கு உடனடியாகவே வள்ளங்களுக்கும் வலைகளுக்கும் கடன் வழங்கி அரசாங்கம் அக்குடும்பங்களின் பெருநட்டத்தை ஈடுசெலுத்த வேண்டுமென அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதெனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. இது பற்றி இவ்வாரத்தில் திரு. துரைரத்தினமும் நிதிமந்திரியையும், மீன்பிடி மந்திரியையும் கண்டு பேசுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

கோரப் புயலால் பதிக்கப்பட்ட திருக்கோணமலை, மன்னார்ப் பகுதிகளைப் பார்வையிட்ட காப்டன் கதிர்காமர் "திருமலையிலும், மன்னாரிலும் நடந்த பொருள் சேதத்தை ஒருவாறு காலப்போக்கில் ஈடு செய்ய முடியுமென்றாலும் வடபகுதியில் அதிலும் மீனவர்கள் மத்தியில் நிகழ்ந்த உயிர்ச் சேதத்தை எவ்விதத்திலும் ஈடுசெய்ய முடியாது" என்று மிக்கவருத்தத்தோடு கருத்து தெரிவித்தார்.

இன்று கொழும்பிலிருந்து விமானம் மூலம் வந்த தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. அமிர்தலிங்கம், திரு. துரைரத்தினம், வழக்கறிஞர் திரு. க. நடராசா ஆகியோருடன் மயிலிட்டிக்குச் சென்று பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு சென்று அனுதாபம் தெரிவித்தார்.

இன்றுகாலை திரு. துரைரத்தினம் இலங்கையிலுள்ள இந்தியக் கைமிஷனருக்கு அடித்துள்ள தந்தியொன்றில் இந்தியக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்ட மக்களுள் இலங்கையர்கள் இருக்கிறார்களா என்பதை உடனடியாக தெரிவிக்குமாறு கேட்டுள்ளார்.

### வலைகள் கரைசேர்ந்தன

குருவளியில் சிக்குண்டு மரணமானவர்களுக்கு சொந்தமானதெனக் கருதப்படும் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் காரைநகர், கரையூர், நீலங்கட்டுத்துறை ஆகிய இடங்களில் கரைசேர்ந்துள்ளன. கரையூரில் மட்டும் 2 லட்சம் பெறுமதியான வலைகள் கரை சேர்ந்தன.

## நாகவிகாரைக்கு சிறிதளவு சேதமே

கொழும்பு, ஞாயிறு

நயினாதீவிலுள்ள நாகதீப விகாரை முற்றாகச் சேதமடைந்துவிட்டதாக வெளியான தகவல் தவறானது என கடற்படை அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர். உயிர்ச்சேதம் எதுவுமில்லை என்றும், ஆலயத்தின் கோபுரம் பெயர்த்தெறியப்பட்டதாயும், விகாரைக்குச் சிறிதுமட்டுமே சேதமேற்பட்டதாயும் ஆலய பிரதம குரு தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

## திரு. குமாரசாமி

பரந்தன், ஞாயிறு

கிளிநொச்சித்தொகுதி மக்கள் தனது சேவையை மீண்டும் விரும்புவதால், எதிர்வரும் தேர்தலில் கிளிநொச்சித் தொகுதியில் சுயேட்சை அபேட்சகராக போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் சாவகச்சேரி எம். பி. திரு வி. குமாரசாமி நமது நிருபரிடம் கூறினார்.

ஜனவரி 1-ம் தேதி திரு. குமாரசாமி தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்க கிளிநொச்சி தொகுதிக்கு வருகிறாரென்றும் அவரை வரவேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.